# தீதும் நன்றும் பிறர் தர வாரா

61-வது சுதந்திர தின விழா எல்லா மாநிலங்களிலும் விமரிசையாகவும், அசம்பாவிதம் எதுவுமின்றி கொண்டாடப்பட்டது. சுதந்திர தினம் என்றாலே எல்லோருக்கும் அந்நாளில் ஏற்பாடு செய்யப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தான் நினைவுக்கு வரும். ஒரு லட்சம் போலீசார் குவிப்பு, டிக் டிக் டிக்.... சுதந்திர தினம் நெருங்குகிறது – போன்ற தலைப்பு செய்திகள் நிகழ்காலத்தின் பிரதிபலிப்பு.

சமீபத்திய பெங்களூரு, அகமதாபாத், சூரத் நகரங்களில் நிகழ்ந்த தொடர் குண்டு வெடிப்பு சம்பவங்கள் நாட்டையே உலுக்கியது. அகமதாபாத்தில் நடந்த சம்பவம் மற்ற நிகழ்வுகளை விட கொடுமையானது. சூரத்தில் ஒவ்வொரு நாளும் உயிருள்ள குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கப்படுகின்றன. இது வரை 29 வெடிக்காத குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

"நல்ல தீவிரவாதி செத்தவனாகவே இருப்பான்" – இது பயங்கரவாத படிப்பில் கூறப்படும் முதுமொழி. பயங்காரவாதத்தில் தீவிரமாக ஈடுபடுபவன் தன் உயிரையும் இழப்பதற்கு தயாராக இருப்பான்; அவன் சேர்ந்த அமைப்பிற்கு அவன் நல்ல தீவிரவாதி. பயங்கரவாதத்தை ஒடுக்கும் பணியில் உள்ள போலீஸார் இம்மாதிரி உயிர் தியாகத்திற்கு தயாராக இருக்கும் தீவிரவாதியை சுட்டு வீழ்த்துவதிலே குறியாயிருப்பார்கள் – அதற்காக தான் மேற் சொன்ன முதுமொழி.

வன்முறையாளர்கள் தங்களது முயற்சியில் பல முறை தோற்கலாம், ஒருமுறையாவது அவர்களது தீய எண்ணம் நிறைவேறினாலும் சமுதாயத்திற்கு பேரிழப்பாக முடிகிறது. உள்நாட்டு பாதுகாப்பு அமைப்புகள் ஒவ்வொரு முறையும் வெற்றி பெற வேண்டும், ஒரு சிறு அசம்பாவிதம் நிகழ்ந்தாலும் எடுத்த முயற்சிகள் பெரும் பின்னடைவு அடையும். பாதுகாப்பு மற்றும் நுண்ணறிவு (Intelligence) அணிகள் பல இடங்களில் பயங்கரவாத குழுக்களை கண்டுபிடித்து செயலிழக்க செய்துள்ளன. ஆனால் நுண்ணறிவு பிரிவுகள் தங்களது வெற்றிகளை பறை சாற்ற முடியாது. தோல்வியை தழுவினால் அதற்கு பொறுப்பேற்க வேண்டும்.

**2003**–ல் இருந்து **95** இடங்களில் இந்தியாவில் நடந்த தொடர் குண்டுவெடிப்பு சம்பவங்களில் ஒரு உண்மை புலப்படும். தீய செயல்களில் ஈடுபடும் பயங்கரவாத குழுக்களுக்கு தெரிந்தோ தெரியாமலோ உள்ளூரில் உதவி கிடைத்துள்ளது. ஒரு சம்பவத்தில் தீவிரவாதிகள் அதிக வாடகை கொடுத்து வீடு எடுத்து தங்கி சம்பவத்திற்குப் பிறகு தலைமறைவாகியுள்ளனர். **1991**–ல் நிகழ்ந்த "திருப்பெரும்புதூர்" குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்ட சிவராசன், சுபா சென்னை புறநகர் பகுதியில் தங்கி பின்பு பெங்களூரு சென்றனர். மும்பையில் 2003–ல் நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் குறித்த நேரத்தில் வெடிக்கக் கூடிய குண்டு மறைத்து வைக்கப்பட்ட பெட்டியை சம்பந்தமே இல்லாத மூன்றாம் மனிதர்கள் மூலம் மக்கள் நடமாடும் இடத்தில் வைக்கப்பட்டு சேதம் ஏற்படுத்தப்பட்டது.